# பிள்ளைகளுக்கு போதிக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய உதவியாளர்களுக்கும் வழிகாட்டுதல்கள்

ஆரம்பித்தல்

"அன்பான தேவனே, நீர் மிகவும் நேசிக்கும் பிள்ளைகளை சந்திப்பதற்கு நான் ஆயத்தப்பட எனக்கு உதவி செய்யும்"

1. **பவுல் - தீமோத்தேயு பிள்ளைகளுக்கான பாடத்தைப் பயன்படுத்தவும்**

- ஒரே பாடப்பொருளின் கீழ் மேய்ப்பர்களுக்கு ஒன்றும், பிள்ளைகளுக்கு ஒன்றுமாக இரண்டு பாடத்திட்டங்கள் அடங்கிய தொகுதியாக பவுல் - தீமோத்தேயு பாடங்கள் வருகின்றன. பிள்ளைகளுக்கான பாடங்களின் மேல் "பிள்ளைகள்" என்று எழுதப்பட்டு இருக்கும்.
- பெரியவர்கள் படிக்கும் அதே பாடப்பொருளையே (Topic) பிள்ளைகளும் படிப்பார்கள்.
- பெரியவர்கள் படிக்கும் பாடத்திற்கு சம்பந்தப்பட்ட வேதாகமக் கதையை பெரியவர்களுக்கு முன்னரே பிள்ளைகள் படிக்கும்படியாக ப-தீ பாடத்திட்டம் அமைந்துள்ளது. ஆராதனையின் போது இந்த வேதக்கதையைப் பெரியவர்களுக்குப் பிள்ளைகள் நடித்துக் காட்டுவார்கள்.

2. **உங்கள் பிள்ளைகளுக்கு தேவைப்படும் செயல்பாடுகளை (activities) பாடத்தில் இருந்து தெரிந்து எடுக்கவும்.**

- பிள்ளைகளுக்கான பாடத்தில் அநேகம் செயல்பாடுகள் உள்ளன. இவை தெரிந்து எடுத்துக்கொள்ள வேண்டியவை. உங்கள் நேரத்துக்கும், தற்போதைய தேவைக்கும் ஏற்றவற்றை பயன்படுத்துங்கள்; மற்றவைகளை விட்டு விடுங்கள்.

3. **ஆராதனையின் போது பெரியவர்களுக்கு நடித்துக் காட்ட வேண்டியவற்றை பிள்ளைகளுக்கான கூட்டத்தில் அவர்களே ஆயத்தம் செய்யட்டும்.**

- சிறு பிள்ளைகள், ஒன்றாக, குழுவாக பலர் இணைந்து நின்று பேசலாம், பாடலாம்.
- இதில் மனப்பாட வசனம், சிறு நாடகம், கவிதை, குறுகிய வாசிப்பு ஆவியவைகள் அடங்கும்.
- சில பிள்ளைகள் அமைதியாகவும், வெட்கப்படுகிறவர்களாகவும் இருப்பார்கள். ஒன்றாக பலரோடு இணையும் போது அவர்கள் இவற்றில் பங்கு கொள்ள இது உதவியாய் இருக்கும்.

4. **பிள்ளைகள் அறிந்த இராகத்தில் எழுதப்பட்ட எளிமையான பாடல்களையே அவர்கள் பாடட்டும்.**

- பிள்ளைகளுக்குப் பிடித்த இராகத்தில் அமைந்த எளிய பாடல்களைப் பாடதிட்டதில் சேர்த்துக் கொள்ளவும்.
- இந்த இராகத்துக்குப் பொருத்தமாகவும், அந்த வார பாடத் தலைப்பிற்குப் பொருத்தமாகவும் பெரிய பிள்ளைகளைப் பாடல் எழுத வைக்கவும்.

5. **உடல் அசைவு, கை அசைவுக்கு ஏற்ப சிறு பிள்ளைகள் அதையே திரும்ப செய்யட்டும்.**

- கதை சொல்லும் போதும் பாடும் போதும் விரல்களையோ, கையையோ, காலையோ அசைப்பதற்கு பிள்ளைகள் விரும்புவார்கள். உதாரணமாக, இராட்சசனான கோலியாத்தை தாவீது கொல்லும் கதையைச் சொல்லும்போது அவர்கள் இவ்வாறு பங்கு கொள்ளட்டும்.
- கோலியாத் இஸ்ரவேல் படைகளை நோக்கி சவால் விடும்போது பிள்ளைகள் தங்கள் முஷ்டியை மடக்கி அசைக்கலாம்.
- தாவீது கல்லை கவணில் வைத்து வீசும்போது பிள்ளைகளும் அவன் எறிவதைப் போல தங்கள் கரங்களை அசைக்கலாம்.
- கோலியாத் விழும்போது, பிள்ளைகளும் முனகியவாறே கீழே விழலாம்.

- சிறு பிள்ளைகள் திரும்பத் திரும்பக் கூறுவதையும் ஒலிகளையும் இரசிப்பார்கள். உதாரணமாக:
- நீங்கள் அல்லது அவர்களோ நல்ல சமாரியன் கதையைக் கூறும்போது, கழுதை சத்திரத்தை நோக்கி நடக்கும் போது எழும் குளம்பொலியை குழந்தைகள் திரும்பத் திரும்பக் கூறலாம், "கிளாப்! கிளாப்! கிளாப்!"
- ஆதாம் ஏவாள் கதையைக் கூறும்போது, பாம்பைப் பற்றிக் கூறும்போது பிள்ளைகள் பலமுறை "ஸ்ஸ்ஸ்" ஓசையை எழுப்பலாம்.

**6. பெரிய பிள்ளைகள் சிறு பிள்ளைகளுக்கு போதிக்கலாம் அல்லது வழிகாட்டலாம்.**

- பெரிய பிள்ளைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்குங்கள்.
- எல்லாம் எளிமையாக இருக்கட்டும். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அடியாக செய்யச் சொல்லவும்.

**7. பெரியவர்களோடு சேர்ந்து பிள்ளைகளும் துதிக்கட்டும்.**

- கூடிய மட்டும் பிள்ளைகளையும் பங்கேற்கச் செய்து ஒரு குடும்ப உணர்வை துதி ஆராதனையின் போது உண்டாக்க வேண்டும்.
- ஆராதனையின் போது பெரியவர்களோடு இணைந்து செய்யக்கூடிய விஷயங்கள் பிள்ளைகளுக்கான பாடத்தில் உண்டு.
- இவற்றை நன்றாக பயிற்சி செய்து முதலில் பிள்ளைகள் கூட்டத்தில் செய்து பார்க்க வேண்டும்.

**8. சிறுசிறு குழுக்களில் பிள்ளைகள் சொல்வதை கவனிக்க வேண்டும். அவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர உதவி செய்ய வேண்டும்.**

- முக்கிய ஆராதனையின் போது மூன்று அல்லது ஐந்து பேர் அடங்கிய சிறு குழுக்களாக பிரியும் நேரத்தை PTLT பாடங்கள் ஒதுக்குகிறது. இதன் மூலம் மக்கள் ஒருவரோடு ஒருவர் பேசவும் இணைந்து ஜெபிக்கவும் முடியும். இப்படிப்பட்ட சில குழுக்களில் பிள்ளைகளையும் சேர்க்க வேண்டும்.
- இந்தக் குழுக்களில் பிள்ளைகளோடு பேசவும், சேர்ந்து ஜெபிக்கவும் பெரியவர்கள் சிலரை ஆயத்தப்படுத்துங்கள்.
- இதை வேதாகமப் படிப்புக்கு பின் வைத்துக் கொள்ளலாம். இதன் மூலம் கேள்விகள் கேட்கவும், வேத பகுதியைக் குறித்த விளக்கங்களை அளிக்கவும் முடியும்.
- சபையாகக் கூடி வரும்போது ஒருவருக்கொருவர் போதிக்கவும், சேவை செய்யவும் புதிய ஏற்பாடு கூறுகிறது. இது பிள்ளைகளுக்கும் சேர்த்துதான். இதை செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக செயலாற்றுகிறார்.

**9. சிறு குழுக்களில் பிள்ளைகளோடு பேசும்போது அவர்களுக்கு எவ்வாறு உதவி செய்வது என்பதைக் கண்டறியவும்.**

- இந்தக் கதையில் வரும் யாரை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள்? ஏன்? என்பன போன்ற கேள்விகளைக் கேளுங்கள்.
- "அந்த மனிதனைப் போல ஆக விரும்புகிறீர்களா? நீங்கள் அதற்காக என்ன செய்ய வேண்டும்."
- "உங்கள் வீட்டிலோ, பள்ளியிலோ, பக்கத்து வீட்டுக்காரர்களிடமோ நாம் ஜெபிக்க வேண்டிய பிரச்சினை எதுவும் உண்டா?"
- "அடுத்த வாரம் உங்களால் யாருக்காவது உதவி செய்ய முடியுமா? இரக்கம் காட்டுவீர்களா? என்ன செய்யப் போகிறீர்கள்?"
- "உங்கள் அப்பா அம்மாவை மகிழ்ச்சிப் படுத்த நீங்கள் செய்யப்போகும் காரியத்தை சொல்வீர்களா?"
- "அடுத்த வாரம் உங்கள் சகோதரர்களையும் சகோதரிகளையும் மகிழ்சிப்படுத்தும் படியாக செய்யக் கூடிய ஒரு விஷயத்தை சொல்ல முடியுமா?"

**10. பிள்ளைகள் வேதாகமக் கதைகளை நடித்துக் காட்டட்டும்.**

- பிள்ளைகளின் பாடத்தில் சிறு நாடகங்கள் உண்டு. அவர்கள் முதலில் அதை பிள்ளைகளுக்கான கூட்டத்தில் நடிக்கட்டும். பின் ஆராதனையின் போது பெரியவர்கள் துணையோடு மீண்டும் நடிக்கட்டும்.
- வேதாகமக் கதைகளை நடிக்கப் பிள்ளைகள் ஆசைப்படுவார்கள். இப்படி நடித்தபின் ஆவிக்குரிய உண்மைகள் அவர்களுக்கு நன்கு ஞாபகம் இருக்கும். இந்த நாடக ஒத்திகையே ஒரு போதனை ஆகும். இந்த நாடகங்கள் எளிமையாகவும் குறுகியதாகவும் இருக்க வேண்டும். பல வாக்கியங்களை மனப்பாடம் செய்யும்படி பிள்ளைகளிடம் கூறக்கூடாது.

- உதாரணமாக, பிள்ளைகளின் கூட்டத்தில், விக்கிரக ஆராதனைக்காரர்களாகிய கானானியருடன் யோசுவா யுத்தம் செய்வதை ஒத்திகை பார்க்கும் போது சிலரை யோசுவாவின் வீரர்களாகவும், சிலரை கானானிய வீரர்களாகவும் நடிக்கும்படி கூறவேண்டும்.

- போதுமான பிள்ளைகள் ஒரு நாடகத்துக்கு திகையவில்லை என்றால் பக்கத்து வீட்டு சிறுவர்களை உதவி செய்யக் கேட்கலாம்.

- பிள்ளைகள் கூற வேண்டிய வார்த்தைகளை ஆசிரியர் கூறி அவர்களைத் திரும்பச் சொல்லச் செய்யலாம். ஆனால் நடிப்பை பிள்ளைகளே செய்ய வேண்டும். கொஞ்ச நேரத்துக்கு அவர்கள் அங்கும் இங்கும் சத்தமிட்டபடி ஓடி, வாளும் கேடயமாகவும் பயன்படுத்தக் கூடிய பொருளை தேடி எடுத்து கதையை நடிப்பார்கள், அவர்களை அமைதிப்படுத்த சமயம் எடுக்கும். ஆயினும் இந்த வகையில் அவர்கள் நிறைய கற்றுக் கொள்ளுவார்கள். மகிழ்ச்சியும் அடைவார்கள்.

- ஒவ்வொரு வாரமும் முக்கிய ஆராதனையை வழிநடத்தும் தலைவருடன் பேசி இந்த நாடகங்களை நடத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

- போதுமான பிள்ளைகள் இல்லாத பட்சத்தில் அயலகத்து பிள்ளைகளை உதவி செய்யும்படி அழைக்கலாம். இதன் மூலம் அவர்களும் கிறிஸ்துவை அறிந்து கொள்வார்கள்.

- பெரிய பிள்ளைகள் சொல்ல வேண்டியதை மறந்து போனாலும் பொதுக் கருத்தை உணர்ந்து நன்றாகவே நடிப்பார்கள். முதலில் இது சிரமமாக இருந்தாலும், தங்களுடைய கற்பனைத் திறத்தை பயன்படுத்த ஆரம்பித்த உடன் நாடகம் சிறப்பாக இருக்கும். சில பிள்ளைகள் மனப்பாடம் செய்யவே விரும்புவர். அவர்கள் ஏதாவது ஒரு முறையைப் பின்பற்றட்டும்.

11. **நீங்கள் போதிக்க வேண்டியதை விளக்க பொருட்களையோ படங்களையோ தயாரித்துக் கொள்ளவும்.**

- பொருட்கள் உதாரணம்: இயேசு இந்த உலகத்தின் ஒளி என்பதை போதிக்கும் போது பிள்ளைகள் ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஒரு வசனத்தையோ கவிதையையோ கூறட்டும்.

- அடையாள அட்டைகள் உதாரணம்: பிள்ளைகள் பேசும்போது அவர்களே வரைந்த ஓர் அடையாள அட்டையைப் பிடித்துக் கொள்ளட்டும். இயேசு ஒரு குருடனை சொஸ்தமாக்கியதைக் கூறும்போது "தேவன் அன்பாக இருக்கிறார்" என்று எழுதிய அட்டையைப் பிடித்துக் கொள்ளலாம். நீங்கள் விரும்பினால் மூன்று பிள்ளைகள் மூன்று வார்த்தைகளை ஏந்தி ஒன்றாக நிற்கச் செய்யலாம். "தேவன்" "அன்பாக" "இருக்கிறார்".

- நாட்டியம் உதாரணம் : இஸ்ரவேல் மக்கள் செங்கடலை கடந்து செல்லும் காட்சியில், சில பிள்ளைகள் அதை கொண்டாடும் வகையில் நாட்டியமாட, வேறொருவர் மோசேயும் மக்களும் யாத்திராகமம் 15ல் பாரம் பாடலைப் பாடலாம். சாத்தான் ஏவாளை சோதிக்கும் காட்சியை விவரிக்கும் போது, பெரிய பிள்ளைகளை முதலிலும், மற்றவர்களை உயரத்தின் அடிப்படையிலும் ஒருவரை ஒருவர் பிடித்துக் கொள்ள செய்து "ஸ்ஸ்ஸ்..." என்ற ஒலியோடு சுற்றி ஓடிவரச் செய்யலாம்.

சாதாரண பொருட்களையும், கிடைக்கும் பொருட்களையும் பயன்படுத்துங்கள். கற்பனையை உபயோகியுங்கள், சாதாரணப் பொருட்களே வேதாகம உண்மைகளை நல்ல முறையில் சித்தரிக்கும். பிள்ளைகள் தினமும் பார்க்கும் பொருட்களை பயன்படுத்துங்கள். இது அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் அவர்களுக்கு தேவனை ஞாபகப்படுத்தும். அவர்கள் அதைப் பிடித்துக் கொண்டு அதைப் பற்றி பேசட்டும். உதாரணமாக :

புல் – தானியத்தை விதைத்த விவசாயி
பற்றி இயேசு கூறிய உவமை.
முகங்கள் வரைந்த பாறைகள் – கோபமான முகங்கள் மோசமான மனிதர்களுக்கு;
நல்லவர்களுக்கு சிரிக்கும் முகங்கள்.
பச்சை இலைகள் – நல்ல மனிதர்கள் நீர்வளம் உள்ள இடத்து மரங்கள் (சங். 1).
காய்ந்த இலை – இயேசு கனிகொடுக்காத அத்தி மரத்தை சபித்தார் (மாற்கு 11:12–24).

விளக்குமாறு - பரிசுத்த ஆவியானவர். நமது வாழ்க்கையில் உள்ள பாவங்களை பெருக்கி அகற்றுகிறார்.

சோப்புக்கட்டி - நமது பாவத்தைக் கழுவும் ஒரே சலவைக்கட்டி இயேசுவின் இரத்தமே

ஒரு டம்ளர் தண்ணீர் - இயேசு சமாரியப் பெண்ணுக்கு ஜீவ தண்ணீரை அளிப்பதாகக் கூறினார்.

ஒன்றாக சேர்ந்த இரு குச்சிகள் - சிலுவை

தாளில் வெட்டப்பட்ட மீன் - பேதுரு மீன் பிடிக்கும் காட்சி

ஒரு பென்சில் - நமது பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்படுகின்றன.

ஒரு பாத்திரத்தில் பழங்கள் - ஆவியின் கனிகள் (கலா. 5:22-23).

ஒரு பாத்திரத்தில் அரிசி - கிறிஸ்து நமக்குத் தரும் கலியாண விருந்து (வெளி. 19:6-10).

ஒரு நீண்ட குச்சி, ஓர் ஓரத்தில் கூர்மையாக்கப்பட்டது - இயேசுவின் விலாவில் போர்வீரன் குத்துதல்.

ஒரு சுத்தியல் அல்லது மரம் அறுக்கும் வாள் - நோவாவும் அவனது வேலையாட்களும் பல ஆண்டுகளாகப் பேழையை உருவாக்குதல்

ஒரு பூ - தேவனின் அழகிய சிருஷ்டிப்பு (ஆதி -1) அல்லது தேவ ஈவு (லுக். 12:22-32).

ஒரு முட்செடி - மனிதன் முதலில் பாவம் செய்தபோது தேவன் சபித்தது (ஆதி. 3:17-19).

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net